தேதி: 23-03-2023

வாக்குமூலம்
குற்றவியல் நடுவர் நீதிமன்றம் எண். 2, திருவைகுண்டம்
வழக்கு எண். CC. 746/2022
வழக்கு சாட்சி எண். PW 1

பெயர்: ஆறுமுகம் ஜாதி :
தந்தை பெயர் : தொழில்:
கிராமம்: சமயம்:
தாலுகா: வயது:

( எதிரிகள் 1 ஆஜர். எதிரி 2 ஆஜர் இல்லை. இரண்டாம் எதிரி சார்பில் கு.வி.மு.ச. பிரிவு -317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. )

முதல் விசாரணை :

(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

1. நான் தற்போது கால்வாயில் குடியிருந்து டிரைவராக வேலை செய்து வருகிறேன். 1ம் எதிரி மற்றும் 2ம் எதிரியை எனக்கு தெரியும். 1ம் எதிரி நீதிமன்றத்தில் ஆஜர் இல்லை. அவருடைய வருகையின்மையால் அடையாளம் குறித்து ஆட்சேபனை செய்யமாட்டேன் என்று மனு வாயிலாக தெரிவிக்கப்பட்டது போலீசார் என்னை விசாரித்தார்கள். 2ம் எதிரியை சாட்சிதிறந்த நீதிமன்றத்தில் அடையாளம் காட்டினார்.

2. எங்களுக்கும் எதிரிகளுக்கும் இடம் சம்மந்தமாக முன்விரோதம் உள்ளது. அந்த இடப்பிரச்சனையை ஏற்கனவே பெரியோர் முன்னிலையில் பேசிமுடித்து விட்டோம்.

3. கடந்த 16.02.2022ம் தேதி மாலை 3.30 அளவில் எதிரி ஆச்சிமுத்து என்பவர் எங்கள் வீட்டின் முன் உள்ள பாதையில் குழி தோண்டிக்கொண்டு இருந்தார். நான் அதற்கு எதிரியிடம் பெரியவர்களை

வைத்து பேசி முடித்துவிட்டோம் அல்லவா மீண்டும் ஏன் பாதையை தோண்டுகிறீர்கள் என்று கேட்டேன். அதற்கு 1 மற்றும் 2 ம் எதிரிகள் என்னை பார்த்து தேவடியா மவனே, குதிமவனே உனக்கு என்ன ல வழி என்றும் நீ காவல்நிலையத்திற்கு எத்தனை முறை வேண்டுமானாலும் செல் உன்னால் ஒன்றும் செய்யமுடியாது என்றுகூறி, 1ம் எதிரி அவரது கையால் எனது இடது கன்னத்தில் அடித்தார்.

4. பிறகு 1ம் எதிரி எனது இடது கையை முறிக்கி அவர் கையில் இருந்த வாரியலால் எனது கையில் அடித்து, என்னை பிடித்து கீழேதள்ளி காலால் மிதித்தார். 2ம் எதிரி என்மீது கல் மற்றும் மண்னை அள்ளி வீசினார். அதனைப்பாத்த எனது அப்பா முத்துராமலிங்கம் மற்றும் எனது அம்மா மாலையம்மாள், நாராயணண், மாரிமுத்து ஆகியோர்கள் எதிரியை சத்தம் போட்டார்கள்.

5. சத்தம் போட்ட பின்பு எதிரிகள் என்னை உன் சாவு என் கையில் தான் என்று கொலை மிரட்டல் விடுத்தார். காயம் பட்ட நான் எனது மாமா நாராயணண் திருவைகுண்டம் அரசுமருத்துவமனையில் சேர்த்து பின்பு அங்கு இருந்து மேல்சிகிச்சைக்காக திருநெல்வேலி அரசு மருத்துவமனையில் சேர்த்தார்கள். அங்கு வந்த காவலர்கள் நடந்த விவரத்தை என்னிடம் வாக்குமூலமாக கேட்டார்கள். நான் நடந்த விவரத்தை சொன்னேன். அவர்கள் புகார் வாக்குமூலமாக பதிவு செய்தார்கள். புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். புகார் வாக்குமூலம் **அ.சா.ஆ.1** ஆகும். சம்பவம் குறித்து போலீசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை.

6. 1ம் எதிரி ஆச்சிமுத்து கேரளாவில் குடும்பத்துடன் வடை கடை வைத்து நடத்தி வருகிறார் என்றால் சரியல்ல. அவரும் அவரது மகனும் தான் அங்கு இருந்து வருகிறார்கள்.

7. நான் நடந்த சம்பவத்திற்கு செய்துங்கநல்லூர்காவல் நிலையத்திற்கு சென்று நேரடியாக புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல. மருத்துவமனையில் இருக்கும் போது காவலர்கள் நடந்த விபரத்திற்காக வாக்குமூலம் பெற்றார்கள். நான் திருவைகுண்டம் அரசு மருத்துவமனையில் எவ்வளவு நாள்கள் இருந்தேன் என்றால் 1(1/2) மணி நேரம் இருந்தேன்.

8. எனக்கு ஏற்பட்ட காயத்திற்காக திருவைகுண்டம் அரசு மருத்துவமனையில் மருத்துவர் சிகிச்சை அளித்தார் என்றால் சரிதான். எனக்கு மது அருந்தும் பழக்கம் உண்டா என்றால் இல்லை. இருச்சக்கர வாகனம் மற்றும் நான்கு சக்கர வாகனம் ஓட்டுவேன் என்றால் சரிதான்.

9. நான் திருவைகுண்டம் அரசுமருத்துவமனையில் இருந்து அங்கு உள்ள மருத்துவர்களிடம் எதுவும் சொல்லாமல் தான் திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு சென்றேன் என்றால் சரியல்ல.

10. எதிரி சம்பவம் இடத்தில் குழி தோண்டியதால் தான் ஏற்பட்டது என்று புகார் வாக்குமூலத்தில் குறிப்பிட்டு உள்ளேன் என்றால் சரிதான். ஏற்கனவே சம்பவ இடம் சம்மந்தமாக பிரச்சனை இருந்து வந்தது என்றால் சரிதான்.

11. 1ம் எதிரி ஆச்சிமுத்துவின் வீடு எனது வீட்டிற்கு அடுத்து தெற்கு வீடு என்றால் சரிதான். அந்த வீட்டிற்கு யார் எப்போது வருவார்கள், போவார்கள் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

12. 1ம் எதிரி ஆச்சிமுத்து கேரளாவில் இருந்து எத்தனை முறை அவரது வீட்டிற்கு வருவார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் சொன்ன புகார் வாக்குமூலத்தில் சொன்ன சம்பவதினத்தில் 1ம் எதிரி கேரளாவில் இருந்தார் என்றால் சரியல்ல. அவர் ஊரில் தான் இருந்தார்.

13. புகார் வாக்குமூலத்தில் சொன்ன சம்பவம் என்னால் உருவாக்கப்பட்ட பொய்யான கட்டுக்கதை என்றால் சரியல்ல. 2வதுஎதிரியை நானும் எனது குடும்ப உறுப்பினர்களும் சேர்ந்து சம்பவம் நடந்ததாக கூறப்படும் அன்று கெட்டவார்த்தையால் பேசினோம் என்றால் சரியல்ல.

14. 2வதுஎதிரியை நானும் எனது குடும்ப உறுப்பினர்களும் சேர்ந்து சம்பவம் நடந்ததாக கூறப்படும் அன்று கெட்டவார்த்தையால் பேசியதால் அவர் எங்கள் மீது புகார்மனு கொடுத்து விடுவார் என்ற பயத்தில் தான் நான் திருவைகுண்டம் அரசு மருத்துவமனைக்கு சென்றேன் என்றால் சரியல்ல.

15. நான் திருவைகுண்டம் அரசு மருத்துவமனைக்கு சென்ற விபரத்தை அறிந்த எனது ஊரைச்சேர்ந்த பஞ்சாயத்து தலைவர்கள் அவர்கள் இந்த சம்பவம் குறித்து என்னை அழைத்து பேசினார்கள் என்றால் சரியல்ல.

16. எங்களது பஞ்சாயத்து தலைவர் இருதரப்பினரையும் அழைத்து எங்கள் ஊர் அம்மன் கோவிலில் வைத்து இருதரப்பிரனரையும் நடந்த சம்பவம் உண்மை என்று சத்தியம் செய்ய சொன்னதற்கு நான் சத்தியம் செய்யாமல் திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு சென்று விட்டேன் என்றால் சரியல்ல.

17. என்னை மேற்சொன்ன இரண்டு எதிரிகளும் அடிக்கும் போது யாரும் தடுக்கவரவில்லை என்றால் சரியல்ல. எனது அப்பா தடுத்தார். நான் திருவைகுண்டம் அரசு மருத்துவமனைக்கு சென்று மருத்துவரிடம் என்னை எத்தனை நபர் தாக்கினார்கள் என்று சொன்னேன் என்றால் 2

பேர் என்னை கை மற்றும் விளக்குமாறால் தாக்கியதாகவும், காலால் நெஞ்சில் மிதித்ததாகவும், சொன்னேன்.

18. நான் மேற்சொன்ன படி எந்த விபரத்தையும் அரசு மருத்துவரிடம் கூறாமல் சொன்னேன் என்று இந்த வழக்குக்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

19. சம்பவம் நடந்த அன்று 1வது எதிரி ஆச்சிமுத்து கேரளாவில் இருந்தார் என்றால் சரியல்ல. இது சம்மந்தமாக 1வது எதிரியை எப்போது கைது செய்தார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நான் திருநெல்வேலி அரசு மருத்துவமனையில் எத்தனை நாட்கள் உள்நோயாளியாக இருந்தேன் என்றால் 3 நாட்கள் இருந்தேன்.

20. நான் சொன்ன மாதிரி எந்த சம்பவமும் நடைபெறாமல் எதிரி மீது முன்விரோதம் காரமாண பொய்யான புகார் வாக்குமூலம் கொடுத்தேன் என்றால் சரியல்ல. எனது சாட்சியம் ஏற்ககூடியது அல்ல என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை

சாட்சி சொல்லியதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் வாசித்து காண்பிக்கப்பட்டு அவர் சரியென ஒப்புக்கொள்ளப்பட்ட பின் கையொப்பம் பெறப்பட்டது.

ஒப்பம் /-
திரு. தே.மயில்சாமி.,
நீதித்துறை நடுவர் எண்.2,
திருவைகுண்டம்.

தேதி: 23-03-2023

வாக்குமூலம்

குற்றவியல் நடுவர் நீதிமன்றம் எண். 2, திருவைகுண்டம்

வழக்கு எண். CC. 746/2022

வழக்கு சாட்சி எண். PW 2

| | |
|---|---|
| பெயர்: மாரிமுத்து | ஜாதி : |
| தந்தை பெயர் : | தொழில்: |
| கிராமம்: | சமயம்: |
| தாலுகா: | வயது: |

( எதிரிகள் 1 ஆஜர். எதிரி 2 ஆஜர் இல்லை. இரண்டாம் எதிரி சார்பில் கு.வி.மு.ச. பிரிவு -317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. )

முதல் விசாரணை :

(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

1. நான் தற்போது கால்வாயில் குடியிருந்து டிரைவராக வேலை செய்து வருகிறேன். அ.சா.1 யை எனக்கு தெரியும். அவர் எனது உறவினர் ஆவார்.

2. அ.சா1 னின் குடும்பத்திற்கும் எதிரிகளுக்கும் இடம் சம்மந்தமாக முன்விரோதம் உள்ளது. அந்த இடப்பிரச்சனையை ஏற்கனவே பெரியோர் முன்னிலையில் பேசிமுடித்து விட்டார்கள்.

3. கடந்த 16.02.2022ம் தேதி மாலை 3.30 அளவில் நான் அம்மன் கோவிலில் உள்ள டாக்ஸி ஸ்டேன்ல் இருந்தேன். அ.சா.1 க்கும் எதிரிக்கும் சண்டை நடந்ததாக கேள்விப்பட்டு சம்பவ இடம் சென்றேன். அங்கு அ.சா.1 அடிப்பட்டு கிடந்தார். அவருக்கு தலை , கை மற்றும் கால்களில் காயம் ஏற்பட்டு இருந்தது.

4. அருகில் அ.சா.1 னின் அம்மா, அப்பா இருந்தார்கள். நான் அ.சா.1 னிடம் நடந்த விபரத்தை கேட்டபோது இடப்பிரச்சனை காரணமாக எதிரி அடித்து

விட்டதாக கூறினார். பிறகு காயம்பட்ட அ.சா.1 யை நானும், அ.சா.1 னின் மாமா நாராயணன் திருவைகுண்டம் அரசுமருத்துவமனையில் சேர்த்து பின்பு அங்கு இருந்து மேல்சிகிச்சைக்காக திருநெல்வேலி அரசு மருத்துவமனையில் சேர்த்தோம். என்னிடம் காட்டடப்படும் அறிவேன் சாட்சி கையொப்பம் என்னுடையது தான். அந்த அறிவேன் சாட்சி கையொப்பம் மட்டும் **அ.சா.ஆ.2** ஆகும். 1ம் எதிரி மற்றும் 2ம் எதிரியை எனக்கு தெரியும். 1ம் எதிரி நீதிமன்றத்தில் ஆஜர் இல்லை. அவருடைய வருகையின்மையால் அடையாளம் குறித்து ஆட்சேபனை செய்யமாட்டேன் என்று மனு வாயிலாக தெரிவிக்கப்பட்டது போலீசார் என்னை விசாரித்தார்கள். 2ம் எதிரியை சாட்சிதிறந்த நீதிமன்றத்தில் அடையாளம் காட்டினார். சம்பவம் குறித்து போலீசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை.

5. நான் அ.சா.1 னின் அக்காவின் கணவர் என்றால் சரிதான். எனது வீட்டிற்கும் எதிரியின் வீட்டிற்கும் 6 தெரு தள்ளி உள்ளது என்றால் சரிதான். மேற்படி சம்பவம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான்.

6. மேற்படி சம்பவம் நடந்ததாகஅ.சா.1 சொல்லி தான் எனக்கு தெரியும் என்றால் சரிதான். அ.சா.1 என்னிடம் சொன்ன மாதிரி எந்த சம்பவமும் நடைபெறாமால், நான் அ.சா.1 னின் அக்காவின் கணவர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

சாட்சி சொல்லியதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் வாசித்து காண்பிக்கப்பட்டு அவர் சரியென ஒப்புக்கொள்ளப்பட்ட பின் கையொப்பம் பெறப்பட்டது.

ஒப்பம் /–
திரு. தே.மயில்சாமி.,
நீதித்துறை நடுவர் எண்.2,
திருவைகுண்டம்.

தேதி: 23-03-2023

வாக்குமூலம்
குற்றவியல் நடுவர் நீதிமன்றம் எண். 2, திருவைகுண்டம்
வழக்கு எண். CC. 746/2022
வழக்கு சாட்சி எண். PW 3

பெயர்: மாலையம்மாள் ஜாதி :
தந்தை பெயர் : தொழில்:
கிராமம்: சமயம்:
தாலுகா: வயது:

( எதிரிகள் 1 ஆஜர். எதிரி 2 ஆஜர் இல்லை. இரண்டாம் எதிரி சார்பில் கு.வி.மு.ச. பிரிவு -317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. )

முதல் விசாரணை :

(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

1. நான் தற்போது கால்வாயில் குடியிருந்து வருகிறேன். அ.சா.1 யை எனக்கு தெரியும். அ.சா.1 எனது மகன் ஆவார். 1 மற்றும் 2ம் எதிரிகளை எனக்கு தெரியும்.

2. எங்கள் குடும்பத்திற்கும் எதிரிகளுக்கும் இடம் சம்மந்தமாக முன்விரோதம் உள்ளது. அந்த இடப்பிரச்சனையை ஏற்கனவே பெரியோர் முன்னிலையில் பேசிமுடித்து விட்டார்கள்.

3. கடந்த 2022ம் வருடம் 2மாதத்தில் ஒரு நாள் மாலை 3.30 அளவில் 1ம் எதிரி எங்கள் வீட்டின் முன் உள்ள பாதையில் குழி தோண்டிக்கொண்டு இருந்தார். அ.சா.1 அதற்கு எதிரியிடம் பெரியவர்களை வைத்து பேசி முடித்துவிட்டோம் அல்லவா மீண்டும் ஏன் பாதையை தோண்டுகிறீர்கள் என்று கேட்டார். அதற்கு 1 மற்றும் 2 ம் எதிரிகள் அ.சா.1 யை பார்த்து தேவடியா மவனே, குதிமவனே உனக்கு என்ன ல வழி என்றும் நீ காவல்நிலையத்திற்கு எத்தனை முறை

வேண்டுமானாலும் செல் உன்னால் ஒன்றும் செய்யமுடியாது என்றுகூறி, 1ம் எதிரி அவரது கையால் அ.சா.1 னின் இடது கன்னத்தில் அடித்தார்.

4. பிறகு 1ம் எதிரி அ.சா.1 னின் இடது கையை முறிக்கி அவர் கையில் இருந்த வாரியலால் அ.சா.1 னின் கையில் அடித்து, பிறகு அ.சா.1 யை பிடித்து கீழேதள்ளி காலால் மிதித்தார். 2ம் எதிரி அ.சா.1 யை கல் மற்றும் மண்ணை அள்ளி வீசினார். அதனைப்பாத்த நானும் எனது கணவர் முத்துராமலிங்கம் மற்றும் எனது தம்பி நாராயணண் மற்றும் மாரிமுத்து ஆகியோர்கள் எதிரியை சத்தம் போட்டோம். எதிரி என்னை பார்த்து சேலையை பிடித்து இழுத்து விடுவேன் என்று ஆபாசமாக பேசினார்.

5. சத்தம் போட்ட பின்பு எதிரிகள் எங்களைப் பார்த்து உன் சாவு என் கையில் தான் என்று கொலை மிரட்டல் விடுத்தார். காயம் பட்ட அ.சா.1 யை எனது தம்பி நாராயணன் திருவைகுண்டம் அரசுமருத்துவமனையில் சேர்த்து பின்பு அங்கு இருந்து மேல்சிகிச்சைக்காக திருநெல்வேலி அரசு மருத்துவமனையில் சேர்த்தோம். சம்பவம் குறித்து போலீசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை

6. அ.சா.1 எனது மகன் எனறால் சரிதான். எனது மகன் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரத்தில் நான் வீட்டிற்குள் இருந்தேன் என்றால் சரிதான். யார் முதலில் சத்தம் போட்டார், இரண்டாவது யார் சத்தம் போட்டார்கள் என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் தெரியும். அ.சா.1 என்னிடம் வந்து சொன்னார்.

7. நான் சொன்ன மாதிரி எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. எங்களுக்கும் எதிரிக்கும் உள்ள இடப்பிரச்சனை காரணமாக அ.சா..1 எதிரி மீது எதிரிகள் மீது ஒரு பொய்யான புகார் கொடுத்து உள்ளார் என்றால் சரியல்ல.

8. அ.சா.1 சொன்ன மாதிரி எந்த சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. அ.சா.1 எனது மகன் என்பதால் நான் அ.சா.1க்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

சாட்சி சொல்லியதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் வாசித்து காண்பிக்கப்பட்டு அவர் சரியென ஒப்புக்கொள்ளப்பட்ட பின் கையொப்பம் பெறப்பட்டது.

ஒப்பம் /–
திரு. தே.மயில்சாமி.,
நீதித்துறை நடுவர் எண்.2,
திருவைகுண்டம்.

தேதி: 23-03-2023

வாக்குமூலம்
குற்றவியல் நடுவர் நீதிமன்றம் எண். 2, திருவைகுண்டம்
வழக்கு எண். CC. 746/2022
வழக்கு சாட்சி எண். PW 4

பெயர்: முத்துராமலிங்கம் ஜாதி :
தந்தை பெயர் : தொழில்:
கிராமம்: சமயம்:
தாலுகா: வயது:

( எதிரிகள் 1 ஆஜர். எதிரி 2 ஆஜர் இல்லை. இரண்டாம் எதிரி சார்பில் கு.வி.மு.ச. பிரிவு -317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. )

முதல் விசாரணை :

(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

1. நான் தற்போது கால்வாயில் குடியிருந்து விவசாய வேலை செய்து வருகிறேன். அ.சா.1 யை எனக்கு தெரியும். அ.சா.1 எனது மகன் ஆவார். 1 மற்றும் 2 ம் எதிரிகளை எனக்கு தெரியும்.

2. எங்கள் குடும்பத்திற்கும் எதிரிகளுக்கும் இடம் சம்மந்தமாக முன்விரோதம் உள்ளது. அந்த இடப்பிரச்சனையை ஏற்கனவே பெரியோர் முன்னிலையில் பேசிமுடித்து விட்டார்கள்.

3. கடந்த 16.02.2022 ம் தேதி மாலை 3.30 அளவில் 1ம் எதிரி எங்கள் வீட்டின் முன் உள்ள பாதையில் குழி தோண்டிக்கொண்டு இருந்தார். அ.சா.1 அதற்கு எதிரியிடம் பெரியவர்களை வைத்து பேசி முடித்துவிட்டோம் அல்லவா மீண்டும் ஏன் பாதையை தோண்டுகிறீர்கள் என்று கேட்டார். அதற்கு 1 மற்றும் 2 ம் எதிரிகள் அ.சா.1 யை பார்த்து தேவடியா மவனே, குதிமவனே உனக்கு என்ன ல வழி என்றும் நீ காவல்நிலையத்திற்கு எத்தனை முறை வேண்டுமானாலும் செல்

உன்னால் ஒன்றும் செய்யமுடியாது என்றுகூறி, 1ம் எதிரி அவரது கையால் அ.சா.1 னின் இடது கன்னத்தில் அடித்தார்.

4. பிறகு 1ம் எதிரி அ.சா.1 னின் இடது கையை முறிக்கி அவர் கையில் இருந்த வாரியலால் அ.சா.1 னின் கையில் அடித்து, பிறகு அ.சா.1 யை பிடித்து கீழேதள்ளி காலால் மிதித்தார். 2ம் எதிரி அ.சா.1 யை கல் மற்றும் மண்ணை அள்ளி வீசினார். அதனைப்பாத்த நானும் எனது மாலையம்மாள் மற்றும் எனது மைத்துனன் நாராயணண் மற்றும் மாரிமுத்து ஆகியோர்கள் எதிரியை சத்தம் போட்டோம்.

5. சத்தம் போட்ட பின்பு எதிரிகள் எங்களைப் பார்த்து உன் சாவு என் கையில் தான் என்று கொலை மிரட்டல் விடுத்தார். காயம் பட்ட அ.சா.1 யை எனது மைத்துனன் நாராயணன் திருவைகுண்டம் அரசுமருத்துவமனையில் சேர்த்து பின்பு அங்கு இருந்து மேல்சிகிச்சைக்காக திருநெல்வேலி அரசு மருத்துவமனையில் சேர்த்தோம். சம்பவம் குறித்து போலீசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை

6. அ.சா.1 எனது மகன் என்றால் சரிதான். எனது மகன் திருவைகுண்டம் மருத்துவமனைக்கு சென்ற போதும், திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு சென்ற போது அவனை பார்க்க நான் செல்லவில்லை என்றால் சரிதான்.

7. அ.சா.1 அவரது முதல் விசாரணையில் சொன்ன சம்பவத்தின் போது நான் வீட்டினுள் இருந்தேன் என்றால் சரிதான். சம்பவ இடத்தில் யார் குழித்தோண்டினார் என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான் . சம்பவம் குறித்து எனது மகன் சொல்லி தான் தெரியும்.

8. 1ம் எதிரி எனது அண்ணாச்சி மகன் என்றால் சரிதான். என் மீதும் எனது மகன் மீதும் 2ம் எதிரி மகள் கொடுத்த புகாரின் பேரில் முதல் தகவல் அறிக்கை பதியப்பட்டு உள்ளது என்றால் சரிதான்.

9. அ.சா.1 அவரது முதல் விசாரனையில் சொன்ன மாதிரி எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால சரியல்ல. அ.சா.1 எனது மகன் என்பதால் அவருக்கு ஆதவராக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

சாட்சி சொல்லியதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் வாசித்து காண்பிக்கப்பட்டு அவர் சரியென ஒப்புக்கொள்ளப்பட்ட பின் கையொப்பம் பெறப்பட்டது.

ஒப்பம் /-
திரு. தே.மயில்சாமி.,
நீதித்துறை நடுவர் எண்.2,
திருவைகுண்டம்.

தேதி: 23-03-2023

வாக்குமூலம்

குற்றவியல் நடுவர் நீதிமன்றம் எண். 2, திருவைகுண்டம்

வழக்கு எண். CC. 746/2022

வழக்கு சாட்சி எண். PW 5

| | |
|---|---|
| பெயர்: நாராயணன் | ஜாதி : |
| தந்தை பெயர் : | தொழில்: |
| கிராமம்: | சமயம்: |
| தாலுகா: | வயது: |

( எதிரிகள் 1 ஆஜர். எதிரி 2 ஆஜர் இல்லை. இரண்டாம் எதிரி சார்பில் கு.வி.மு.ச. பிரிவு -317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. )

முதல் விசாரணை :

(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

1. நான் தற்போது கால்வாயில் குடியிருந்து டீக்கடை வைத்து தொழில் செய்து வருகிறேன். அ.சா.1 யை எனக்கு தெரியும். அவர் எனது மருமகன் ஆவார். 1 மற்றும் 2 ம் எதிரிகளை எனக்கு தெரியும். எதிரிகளுக்கும் அ.சா.1 னின் குடும்பத்திற்கும் இடப்பிரச்சசனை சம்மந்தமாக முன்விரோதம் உள்ளது.

2. கடந்த 16.02.2022 ம் தேதி மாலை 3.30 அளவில் நான் அம்மன் கோவிலில் இருந்து வீட்டிற்கு வந்து கொண்டு இருந்தேன். அப்போது சண்டை நடந்த சத்தம் கேட்டு சம்பவ இடம் சென்றேன். அங்கு அ.சா.1 யை எதிரிகள் அடித்துக் கொண்டு இருந்தார்கள். நான் அவர்களை சத்தம் போட்டேன்.

4. நான் அ.சா.1 னிடம் நடந்த விபரத்தை கேட்டபோது வீட்டின் அருகே தோண்டியதை கேட்டதன் காரணமாக எதிரி அடித்து விட்டதாக கூறினார். பிறகு காயம்பட்ட அ.சா.1 யை நானும், மாரிமுத்து என்பவரும்

திருவைகுண்டம் அரசுமருத்துவமனையில் சேர்த்து பின்பு அங்கு இருந்து மேல்சிகிச்சைக்காக திருநெல்வேலி அரசு மருத்துவமனையில் சேர்த்தோம். 1ம் எதிரி மற்றும் 2ம் எதிரியை எனக்கு தெரியும். 1ம் எதிரி நீதிமன்றத்தில் ஆஜர் இல்லை. அவருடைய வருகையின்மையால் அடையாளம் குறித்து ஆட்சேபனை செய்யமாட்டேன் என்று மனு வாயிலாக தெரிவிக்கப்பட்டது போலீசார் என்னை விசாரித்தார்கள். 2ம் எதிரியை சாட்சிதிறந்த நீதிமன்றத்தில் அடையாளம் காட்டினார். சம்பவம் குறித்து போலீசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை.

5. இந்த சம்பவம் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். நான் எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் சொன்ன விபரம் அ.சா.1 சொல்லி தான் எனக்கு தெரியும் என்றால் சரிதான்.

6. நான் காவல் துறையில் வந்து விசாரித்த காவலரிடம் காவல் நிலையத்தில் வைத்து தான் கையொப்பம் செய்து கொடுத்தேன் என்றால் சரிதான். நான் அ.சா.1 க்கு என்ன உறவு முறை என்றால் தாய்மாமா உறவு ஆகும்.

7. நான் அ.சா.1 எனது மருமகன் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அசா.1 சொன்னது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. அ.சா.1 க்கும் எதிரிக்கும் இடையே உள்ள முன்விரோதம் காரணமாக அ.சா.1 பொய்யாக புகார் கொடுத்து உள்ளார் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

சாட்சி சொல்லியதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் வாசித்து

காண்பிக்கப்பட்டு அவர் சரியென ஒப்புக்கொள்ளப்பட்ட பின் கையொப்பம் பெறப்பட்டது.

ஒப்பம் /–
திரு. தே.மயில்சாமி.,
நீதித்துறை நடுவர் எண்.2,
திருவைகுண்டம்.